LIBRARY
22 DEC 2016
UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2013/2014 (ஒக்டோபர்/நவம்பர் 2016)

## GYS 2213 பொருளாதாரப் புவியியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

01. (i) பொருளாதாரப் புவியியல் தொடர்பான வரைவிலக்கணம் நான்கினை குறிப்பிட்டு அவ்வரைவிலக்கணங்களை முன்வைத்த அறிஞர்களின் பெயர்களையும் குறிப்பிடுக.

(4x2=8 புள்ளிகள்)

(ii) "உலகில் காணப்படும் எந்த ஒரு பொருளாதார நடவடிக்கையும் புவியியல் பரிமாணங்களை அடிப்படையாகக் கொண்டே வளர்ச்சி பெற்று வருகின்றன." இக்கூற்று தொடர்பான உமது கருத்தினை தகுந்த ஆதாரங்களுடன் விளக்குக.

(17 புள்ளிகள்)

02. (i) பொருளாதார செயற்பாடுகளை வகைப்படுத்தி அவற்றுள் உள்ளடக்கப்படும் பொருளாதார நடவடிக்கைகளை பட்டியற்படுத்துக.

(05 புள்ளிகள்)

(ii) "பொருளாதார செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் நவீனத்துவ செயற்பாடுகள் உள்வாங்கப்படுவதானது இன்றியமையாததாக உள்ளது." இக்கூற்றினை நீர் ஏற்றுக்கொள்வீரா? உமது கருத்தினை நியாயப்படுத்துக.

(20 புள்ளிகள்)

03. (i) ஆரம்பகாலத்தில் காணப்பட்ட பழமையான பொருளாதார முறைகளை குறிப்பிட்டு அவற்றின் தனித்துவமான பண்புகளை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ii) முதலாழித்துவ பொருளாதார முறை என்றால் என்ன என்பதனை விளக்கி அப்பொருளாதார முறையில் காணப்படும் நன்மைகள், தீமைகள் தொடர்பாக விளக்குக.

(15 புள்ளிகள்)

04. கட்டளைப் பொருளாதார முறையின் (Command Economy) இயல்புகளை சுருக்கமாக விளக்கி சந்தைப் பொருளாதாரத்திற்கும் கட்டளைப் பொருளாதாரத்திற்கும் இடையேயான வேறுபாடுகளை ஒப்பிட்டு ஆராய்க.

(25 புள்ளிகள்)

05. உலக பொருளாதார வளர்ச்சியில் சர்வதேச வர்த்தகத்தின் (International Trade) பங்களிப்பு தொடர்பாக கட்டுரை வரைக.

(25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் யாதாயினும் இரண்டினிற்கு சிறுகுறிப்பெழுதுக.

(i) உலக பொருளாதார நெருக்கடியும் நாடுகள் எதிர்கொள்ளும் சவால்களும்

(ii) இலங்கையின் பொருளாதார விருத்தியில் கைத்தொழிற் துறையின் பங்களிப்பு.

(iii) இலங்கையின் பொருளாதாரமும் பெருந்தோட்ட விவசாயமும்

(12 ½ x 2 = 25 புள்ளிகள்)

*****